செய்தி வெளியீடு **நாள் : 13.08.2025**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் அய்யப்பந்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கெருகம்பாக்கம், கோவூர், கொளப்பாக்கம், தண்டலம் ஆகிய பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக ரூ.20.92 கோடி நிதியை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திருமதி.க.ஆர்த்தி அவர்களிடம் வழங்கினர்.

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (13.08.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து - நடராசன் மாளிகையிலுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் அய்யப்பந்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கெருகம்பாக்கம், கோவூர், கொளப்பாக்கம், தண்டலம் ஆகிய பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து **ரூ.20.92 கோடி நிதியை** மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் **திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள்** மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திருமதி.க.ஆர்த்தி அவர்களிடம் வழங்கினர்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய அய்யப்பந்தாங்கல், பரணிபுத்தூர், கொளப்பாக்கம், மௌலிவாக்கம், கெருகம்பாக்கம், கோவூர், தண்டலம் ஆகிய சென்னை புறநகரை ஒட்டி வளர்ந்து வரும் ஊராட்சிகளில் உள்ள சாலைகளை செப்பனிடுதல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.20.92 கோடி நிதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திருமதி.க.ஆர்த்தி, முதன்மை தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate™